
# ப்ராம்ப்டன் (Brampton) பேருந்துகளில் பயணிக்க தங்களை வரவேற்கிறோம்

**ப்ராம்டன் (Brampton) பேருந்துப் பயணம் என்பது பேருந்தில் ஏறும் முன்பாகவே கட்டணம் செலுத்தக்கூடியதும், மாநகரம் முழுவதிலுமாகவும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளுக்கும் சேவையாற்றும் ஒரு அமைப்பாகும். பாதுகாப்பானதும் நம்பகமானதுமான சேவையை அளிக்க நாங்கள் அயராது உழைக்கிறோம்.**




உங்களுடைய பேருந்து எப்போது வரவிருக்கிறது எனத் தெரிந்துகொள்வதற்கான பல வழிகள் உள்ளன என்பது உங்களுக்குத் தெரியுமா?

நெக்ஸ்ட் ரைட் (Next Ride) என்பதை உபயோகித்து அடுத்த பேருந்துக்கான நிகழ்நேர, புத்தம்புது தகவலை நீங்கள் பெறலாம். உங்களிடம் இருக்கவேண்டியது, பேருந்து நிறுத்தத்தின் நான்கு இலக்க எண் மட்டுமே, உங்களுக்கான நிறுத்தத்தில் அடுத்த பேருந்து வந்து சேரும் நேரத்தை நீங்கள் அறியலாம்.

**குறுஞ்செய்தி அல்லது மின்னஞ்சல்:** நான்கு இலக்க பேருந்து நிறுத்த எண்ணை குறுஞ்செய்தியாகவோ அல்லதுnextride@brampton.ca எனும் மின்னஞ்சலுக்கு செய்தியாகவோ அனுப்பவும். உதாரணத்திற்கு: 3361

**ஆன்லைனில்:** bramptontransit.com aஎனும் வலைத்தளத்திற்கு வருகை தந்துநெக்ஸ்ட் ரைட் (Next Ride) மீது கிளிக் செய்யவும்

a. உங்கள் நான்கு இலக்க பேருந்து நிறுத்த எண்ணை உள்ளீடு செய்தால், உங்கள் நிறுத்தத்திற்கு என்னென்ன நேரங்கள் என்ற தகவலைக் காணலாம்.

b. உங்களிடம் ஒரு ஸ்மார்ட்ஃபோன் இருந்தால், போகிறபோக்கிலேயே அணுகும் வகையில் இந்தப் புத்தகக்குறியை அதில் அமைத்துக் கொள்ளவும்: nextride.brampton.ca.

**தொலைபேசி:** 905.874.2999 ஐ அழைத்து அதில் கூறப்படும் அறிவுரைகளைப் பின்பற்றவும்

## அதனை இன்னும் எளிதாக்கவும், அறிவிப்புக்களுக்காக சைன்-அப் செய்யவும்

நெக்ஸ்ட் ரைட் (Next Ride) அறிவிப்பு* என்பது சந்தாதாரருக்கான சேவையாகும், இது உங்கள் பேருந்துஎப்போது புறப்படவிருக்கிறது என்பதற்கான வாடிக்கையான அறிவிப்புக்களை உங்களுக்கு அனுப்புகிறது. ஒரு சந்தாவில் 10 எண்ணிக்கை வரையிலான பேருந்து நிறுத்தங்களைத் தேர்ந்தெடுக்கவும்.

bramptontransit.com எனும் வலைத்தளத்திற்கு வருகை புரிந்து நெக்ஸ்ட் ரைட் (Next Ride) மீது கிளிக் செய்யவும். நெக்ஸ்ட் ரைட் (Next Ride) பக்கத்தில், அறிவிப்புகள் எனும் லின்க்-ஐ கிளிக் செய்து உங்கள் தகவல்களை நிரப்பவும்.

*நெக்ஸ்ட் ரைட் (Next Ride) அறிவிப்பு என்பது ப்ராம்டன் (Brampton) பேருந்து வசதியினால் வழங்கப்படும் இலவச சேவையாகும். இருப்பினும், நீங்கள் உபயோகிக்கின்ற சேவையைப் பொருத்து, தொலைபேசி சேவை வழங்குபவர்கள் உங்களின் தனித்தனி செய்திகளுக்கு கட்டணம் விதிக்கக் கூடும்.

**கைப்பேசி:** எங்களுடைய நெக்ஸ்ட் ரைட் (Next Ride) கைப்பேசிச் சேவையானது, ஒரு செயலியின் எளிதாக உபயோகிக்கவல்ல அதே வசதியை உங்களுக்குக் கொடுக்கிறது.

nextride.brampton.ca வலைத்தலத்தை உங்கள் ஸ்மார்ஃபோனில் புத்தகக் குறியாக அமைத்து,அடுத்த பேருந்துக்கான தகவல்களை உங்கள் விரல் நுனியில் வைத்துக் கொள்ளுங்கள்.

## நேர அட்டவணைகள் மற்றும் மேப்-கள்

அனைத்து ப்ராம்டன் (Brampton) பயண வழித்தடம் பற்றிய நேர அட்டவணைகள் மற்றும் மேப்-களை bramptontransit.com எனும் வலைத்தளத்திலிருந்து நேர அட்டவணைகள் மற்றும் மேப்-கள் பகுதியில் பெறலாம்.

## ட்ரிப்ளிங்க்ஸ்(Triplinx)

ப்ராம்ப்டன் ( Brampton), கிரேட்டர் டோரோண்ட்டோ (Greater Toronto) மற்றும் ஹாமில்ட்டன் (Hamilton) Area (GTHA) பகுதிகளுக்குள்ளாக உங்கள் பயணத்தைத் திட்டமிடுவதற்கு ட்ரிப்ளிங்க்ஸ் (Triplinx), மெட்ரோலிங்க்ஸ் (Metrolinx) இன் அதிகாரபூர்வ பயணத்திட்டத்துடன் ஒப்பீடு செய்துகொள்ளவும்.

உங்கள் பயணத்தைத் திட்டமிடுவது எளிது; நீங்கள் பயணத்தைத் துவக்குமிடம், மற்றும் சேருமிடத்தை உள்ளிடுவீர்களேயானால், எப்படி சென்றடைவது என ட்ரிப்ளிங்க்ஸ் (Triplinx) உங்களுக்குக் கூறிவிடும். அதிகபட்சம் நடந்து செல்லவேண்டிய தூரம் அல்லது போக்குவரத்து வசதி போன்ற விருப்பத்தெரிவுகளை உபயோகித்து உங்கள் பயணத்திட்டத்தை பழக்கமாக்கி கொள்ளவும். ட்ரிப்ளிங்க்ஸ் (Triplinx) என்பது, பேருந்து, மிதிவண்டி அல்லது நடந்து செல்வது ஆகிய வழிகளில் தனித்துவமாகவோ அல்லது இந்த விருப்பத்தெரிவுகளின் இணைப்புகளாகவோ இருக்கும் பயணத் தகவல்களைக் கொடுப்பதற்காகவே வடிவமைக்கப்பட்டது.

நீங்கள் புறப்படும் முன்பாகவே உங்களுக்குத் தேவையான பிரயாண அட்டவணை, கட்டணங்கள், மற்றும் இதர தகவல்களையும் நீங்கள் காணலாம்.

## கூகிள் (Google)

நீங்கள் கூகிள் மேப்ஸ் (Google Maps) உபயோகிப்பவர் என்றால், கூகிள் (Google) பேருந்து வசதியை உபயோகித்து ப்ராம்ப்டன் (Brampton) பேருந்து வசதியைக்கொண்டு ஒரு பயணத்தைத் திட்டமிடவும்.

## கட்டணம் செலுத்துதல்

பயணிகள் தங்கள் ப்ரேஸ்ட்டோ (PRESTO) கார்டு அல்லது ரொக்கம் கொண்டு ப்ராம்ப்டன் (Brampton) மற்றும் ஸூம் (Züm) வசதிக்கான கட்டணங்களைச் செலுத்தலாம்.

நீங்கள் ரொக்கம் செலுத்தவேண்டுமானால் சரியான சில்லரையுடன் பேருந்தில் ஏறவும். பேருந்து ஓட்டுனர்கள் சில்லரை வழங்க இயலாது.



ப்ரெஸ்ட்டோ (PRESTO) என்பது மின்னணு முறை பணம் செலுத்தும் அமைப்பாகும், இது கிரேட்டர் டோரோன் ட்டோ (Greater Toronto) மற்றும் ஹாமில்ட்டன்(Hamilton) பகுதி (GTHA) மற்றும் ஒட்டாவா (Ottawa) ஆகியபகுதிகளில் இயங்கும் பேருந்து முகமைகளில் உபயோகமாகிறது. ப்ரெஸ்ட்டோ (PRESTO) என்பது ஸ்மார்ட் கார்டு தொழில்நுட்பத்தை உபயோகித்து இயன்ற வரையில் எளிதாகக் கட்டணம் செலுத்த பயணிகளுக்கு உதவுகிறது. பணமாக செலுத்தவும் அல்லது ப்ராம்ப்டன் (Brampton) வாராந்தர அல்லது மாதாந்தர அனுமதிச்சீட்டில் பணம் கட்டி அதனை பேருந்தில் ஏறுகையில் ப்ரெஸ்ட்டோ (PRESTO) சாதனத்தின் மீது தட்டவும்.

மை-ப்ரெஸ்டோ (My PRESTO) கணக்கு ஒன்றை உருவாக்கிட வாடிக்கையாளர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர். உங்கள் கார்டு தொலைந்துவிட்டாலோ அல்லது திருடப்பட்டுவிட்டாலோ அதற்கான மாற்று பெற்றுக்கொள்ளலாம் மற்றும் கையிருப்புத்தொகையும் அப்படியே இருக்கும்.

நீங்கள்பயணக் கட்டணம் செலுத்தும்போதே, பேருந்தில் ஏறும்போது மாறிக்கொள்வதற்கான வேண்டுகோளையும் இயக்குபவரிடம் கூறிவிடவும், இதனால் மாறிக்கொள்ளும் கால அவகாசத்திற்குள் வரம்பு இல்லாத பிரயாணம் செய்யலாம்.

மாறிக்கொள்ளுதல் என்பது சீட்டு வழங்கப்பட்டதிலிருந்து இரண்டு மணி நேரத்தில் காலாவதியாகிறது.

மாறிக்கொள்வதற்கான நேரம் மீதம் இருந்தால் மட்டுமே அதனை ப்ராம்ப்டன் (Brampton) அனுமதிக்கிறது, அது கீழ்க்காணும் ஏதேனும் ஒரு பேருந்து வசதியில் செய்துகொள்ளலாம்:

- பர்லிங்க்டன் (Burlington) பேருந்து வசதி
- டர்ஹாம் (Durham) பிராந்திய (DRT) பேருந்து வசதி
- ஹாமில்ட்டன் ஸ்ட்ரீட் (Hamilton Street) ரெயில்வே (HSR)
- மிஸ்ஸிஸ்ஸாகா (Mississauga) பேருந்து வசதி Transit (MiWay)
- ஓக்வில் (Oakville) பேருந்து வசதி
- TTC - மண்டலம் 3 பஞ்ச் செய்துகொள்ளும் மாறுதல் மட்டும்
- யார்க் (York) பிராந்தியபேருந்து வசதி (YRT)

நீங்கள் ப்ரெஸ்ட்டோ (PRESTO) கார்டு உபயோகிப்பவர் என்றால், மாறிக்கொள்வதற்காக பேருந்து இயக்குபவரைக் கேட்க வேண்டியதில்லை; அது தன்னியக்கமாகவே கார்டில் சேமிக்கப்பட்டு, வழங்கப்பட்ட நேரத்திலிருந்து இரண்டு மணி நேரத்திற்குள் நீங்கள் பயணிக்க அனுமதிக்கிறது.

**குறிப்பு:** திட்டமிடப்பட்ட நேரத்திற்கு ஐந்து நிமிடம் முன்பாகவே உங்கள் பேருந்து நிறுத்தத்தில் இருக்கவும்.

ஸூம் (Züm) என்பது ப்ராம்ப்ட்டன் (Brampton) பேருந்து வசதியின் (BRT) விரைவுச் சேவையாகும். ஸூம் (Züm) நம்பகமானது, மற்றும் நாள் முழுவதற்குமான குறைவான ஸூம் (Züm) என்பது ப்ராம்ப்டன் (Brampton) பேருந்து அமைப்பில் சேர்க்கப்பட்ட தனித்துவமான வசதி, இது தனித்து இயங்குவதில்லை. அதாவது இவ்விரண்டிற்கும் இடையில் எளிதில் மாறிக்கொள்ளலாம், மிகவும் முக்கியமாக, கூடுதல் கட்டணம் ஏதுமில்லை. நிறுத்தங்களைக் கொண்டபடி எங்கள் வழக்கப்படியான பேருந்துகளைக் கொண்டு இயக்கப்படுகின்ற சேவையாகும். இது யார்க் (York) பிராந்தியம், மிஸ்ஸிஸ்ஸாகா( Mississauga) மற்றும் டோரோன்ட்டோ ஆகியவற்றுடன் இணைக்கும் வகையில் ப்ராம்ப்ட்டன் மற்றும் கிரேட்டர் டோரோன்ட்டோ பகுதிகளுக்கு (GTA) சிறந்த இணைப்பினை வழங்குகிறது.

எங்கள் நேரலை முகவருடன் பேச விரும்புகிறீர்களா? தொடர்புக்கான எங்கள் மையம் வாரத்தின் ஏழு நாட்களும் செயல்படுகிறது:

| | |
|---|---|
| திங்கள் - வெள்ளி: | காலை7:00 - மாலை9:00 |
| சனி: | காலை7:00 - மாலை7:00 |
| ஞாயிறு: | காலை 9:00 - மாலை 6:00 |

905.874.2999 அல்லது TTY 905.874.2130 இல் எங்களை அழைக்கவும். transit@brampton.ca இலும் எங்களுக்கு மின்னஞ்சல் அனுப்பலாம்

### மொழிபெயர்ப்புச் சேவைகள்

உங்களுக்கு மொழிபெயர்ப்புச் சேவை வேண்டுமாயின், 905.874.2999 இல் அழைத்து, உங்களுக்கு உதவி வேண்டும் எனக் கூறி உங்கள் மொழியின் பெயரை ஆங்கிலத்தில் கூறவும். கட்டனம் ஏதுமில்லாமலேயே வாய்வழி மொழிபெயர்ப்பாளர் ஒருவர் உங்களுக்காக நியமிக்கப்படுவார். மொழிபெயர்ப்பாளரை தொடர்புக்கு கொண்டுவரும் வரையில் தயவு செய்து காத்திருக்கவும்.

பலதரப்பட்ட பிரயாணங்கள், சேவைகளில் மேம்பாடுகள், விடுமுறைக்காலச் சேவை மற்றும் பேருந்து வசதி பற்றிய புதுப்பித்தல் பற்றியவை உள்ளிட்ட தகவல்களுக்கு @ BramptonTransit மூலமாக எங்களை ட்விட்டரில் ஃபால்லோ செய்யவும். தொடர்புக்கான எங்கள் மையம் உங்களுக்கு ஒரு பதில் ட்வீட் செய்வதில் மகிழ்ச்சியடைகிறார்கள்.

புதுப்பிக்கப்பட்ட செய்திகள், அறிவிப்புகள், பேருந்து பற்றிய நிகழ்ச்சிகள், புகைப்படங்கள், வீடியோக்கள் மற்றும் இன்னும் பலவற்றுக்காக ஃபேஸ்புக் இல் @BramptonTransit வழியாக எங்களை லைக் செய்யவும்!

எங்களுடைய #ThrowbackThursday மற்றும் #BehindTheScenesTuesday புகைப்படங்கள், வேடிக்கையான வீடியோக்கள் மற்றும் பலவற்றைக் காண இன்ஸ்ட்டாகிராம் (Instagram) இல் @bramptontransit வழியாக எங்களைப் பின்பற்றவும்!

### இ-நியூஸ்லெட்டர்(E-Newsletter)

எங்களுடைய இ-நியூஸ்லெட்டெர் (e-newsletter) உபயோகித்து உங்களுடைய இன் -பாக்ஸ்-க்கே ப்ராம்ட்டன் பேருந்து வசதி பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளவும். சேவைகளில் மாறுதல்கள், விடுமுறைக்கால அட்டவணை, நிகழ்ச்சிக மற்றும் பலவற்றுக்கான நாளது தேதி வரையிலுமான தகவல்களைப் பெறவும்!

சந்தாதாரர் ஆவது எளிது! சைன் அப் செய்துகொள்ள எங்கள் வலைத்தளத்திற்கு இன்றே வருகை தரவும்.

YOURS. FOR LIFE.